மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை

அசல் வழக்கு எண். 255/2019

**2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15–ம் நாள் திங்கள் கிழமை** பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பஷீருதீன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : நூர்தீன் சாயபு | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :தேவையூர் | வயது | : 84/2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

(i) உங்களது கிரையதாரர் சௌத் அலிக்கு சர்வே எண்.304/12A ல் எவ்வளவு நிலம் உள்ளது என்றால் எனக்கு கிரையம் செய்து கொடுத்த பத்திரத்தில் கண்டுள்ள அளவிற்கு உள்ளது என சாட்சி பதிலளிக்கிறார். உங்களது கிரையதாரருக்கு எனது பத்திரத்தில் உள்ள அளவை கிரையம் செய்து கொடுப்பதற்கு உரிமையுள்ளது என்பதை நிருபணம் செய்ய எனது கிரையதாரர் பெயரில் எவ்வித வருவாய் துறை ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்களது பத்திரத்தில் கண்டுள்ள அளவிற்கு கிரையம் செய்து கொடுக்க 1ம் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் அவர்களது பாகஅட்டவணை படி தான் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது. 1ம் பிரதிவாதிக்கு அவரது பாகஅட்டவணைக்கு 3 ¼ செண்ட் நிலம் ஒதுக்கபட்டு பி.சா.ஆ.1ல் அவர் எனக்கு 373 ½ சதுரடிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மீதமுள்ள இடம் என்ன ஆனது என்றால் தேசிய நெடுங்சாலைக்காக கையகப்படுத்தப்பட்டு விட்டது. 1ம் பிரதிவாதியின் நிலம் முழுவதுமாக தேசிய நெடுங்சாலைக்கு கையகப்படுத்தப்பட்டுவிட்டது என்றாலும் அதனால் தாவா சொத்தில் கிரையம் ஏற்படுத்திக்கொடுக்க அவருக்கு உரிமையில்லை என்றாலும் சரியல்ல.

(ii) சர்வே எண்.304/12A ல் 1ம் பிரதிவாதியிடமிருந்து எவ்வளவு நிலம் தேசிய நெடுங்சாலைக்கு கையகப்படுத்தப்பட்டது எவ்வளவு நிலம் மீதம் உள்ளது என்பதை காட்ட எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா முழுவதும் வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தேசிய நெடுங்சாலைக்காக கையகப்படுத்தப்பட்ட இடம் போக மீதம் உள்ள இடத்தில் ஒரு குடிசைவீடு உள்ளதா என்றால் வாதி இடத்தில் குடிசை வீடு உள்ளது. அந்த குடிசை வீட்டிற்கு கிழக்கே சிராஜூதீன் நிலம் உள்ளதா என்றால் சரிதான். அந்த இடத்திற்கும் மேற்கே பாதை உள்ளதா என்றால் சௌகத் அலி நிலம் உள்ளது. வடபுரம்

தேசிய நெடுஞ்சாலை உள்ளது, தென்புறம் சம்சுதீன் என்பவர் நிலம் உள்ளதா என்றால் சரிதான். மேற்படி கூரை வீட்டிற்கு மேற்கே பாதை தான் உள்ளது என்றாலும் சௌகத் அலிக்கு எவ்வித இடமும் இல்லை என்றால் சரியல்ல. சௌகத் அலி மோசடியாக ஏற்படுத்திக்கொண்ட வருவாய் துறை ஆவணத்தின் அடிப்படையில் உங்களுக்கு மோசடியாக கிரைய பத்திரத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த மோசடியான கிரையபத்திரம் தாவா சொத்தில் உள்ள வாதியின் உரிமை மற்றும் அனுபவத்தை கட்டுப்படுத்தாது என்றால் மேற்படி ஆவணத்தை ரத்து செய்வதற்கு வாதிக்கு எவ்வித அவசியமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

Iii) உங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் மற்றும் வருவாய் துறை ஆவணம் 1ம் பிரதிவாதியால் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால் 1ம் பிரதிவாதி இவ்வழக்கில் ஆஜர்ஆகி வழக்கை மேற்கொண்டு நடத்தவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் எவ்வித இடமும் இல்லை என்றாலும் உங்களை ஏமாற்றி மோசடியாக கிரைய பத்திரத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்த பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தினை உட்பிரிவு செய்யவில்லை என்றால் பக்கத்து இடத்தில் வழக்கு நிலுவையில் இருந்தது அதனால் உட்பிரிவு செய்யவில்லை. தாவா சொத்துக்கான தற்போதைய கணினி பட்டாவில் வெங்கடேசன் மனைவி சுதா என்பவர் பெயரை தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உங்களுக்கு தெரிந்த வரை இதுநாள் வரை தாவா சொத்தில் வெங்கடேசன் மனைவி சுதா என்பவர் ஏதேனும் அனுபவம் செய்துள்ளாரா என்றால் இல்லை.

iv) தாவா சொத்தில் எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லாத வெங்கடேசன் மனைவி சுதா என்பவரின் பெயரை 1ம் பிரதிவாதி தான் வருவாய் துறையில் மோசடியாக தகவல் கூறி வழக்கு நிலுவையில் இருக்கும்போது அவரது பெயரை தாவா சொத்தின் பட்டாவில் சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியான சௌகத் அலியை உங்களது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளீர்களா என்றால் தயாராக உள்ளேன். தாவா சொத்து பொருத்து தற்போதைய கணினி பட்டா 1ம் பிரதிவாதி சௌகத் அலி பெயரில் தவறுதலாக உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணத்திற்கு பிறகு தனிப்பட்ட கோரி வருவாய் துறையினரிடம் மனு செய்துள்ளீர்களா என்றால் சார்பதிவாளர் அலுவலகத்திலே பணம் கட்டிவிட்டேன் வருவாய் துறையினர் எவ்வித

நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சாட்சி பதில் அளிக்கிறார். மேற்படி சங்கதியை நிரூபணம் செய்வதற்கு பணம் கட்டியது சம்மந்தமாக எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பணம் கட்டி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது சம்மந்தமாக வருவாய் துறையினரிடம் முறையீடு செய்தீர்களா என்றால் முறையீடு செய்தேன். எந்த விதத்தில் முறையீடு செய்தீர்கள் என்றாலும் மனு ஏதேனும் கொடுத்தீர்களா என்றாலும் நேரில் மட்டும் சென்றேன்.

(v) எனது பத்திரத்தின் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்வதற்கு வருவாய் துயையினரிடம் மனு ஏதும் அளிக்கவில்லை என்றால் சரிதான். பட்டாவில் உள்ள படி பூஸ்துதியில் இடம் இல்லை என்றாலும் மேற்படி பத்திரமே மோசடியானது என்றாலும் வருவாய் துறையினரிடம் பட்டா மாறுதலுக்கோ உட்பிரிவிற்கோ எவ்வித மனு செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 பெயரளவில் ஏற்படத்தப்பட்ட ஆவணம் என்றாலும் அது நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் தாவா சொத்து பொருத்து வருவாய் துறை ஆவணங்களை பார்த்தாலே அது நன்கு தெரியவரும் என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள வெங்கடேசன் மனைவி சுதா தாவா சொத்தில் எவ்வித நிலமும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து அருகில் எவ்வித நிலமும் இல்லாமல் தாவா சொத்திலும எவ்வித நிலமும் உரிமையும் அனுபவமும் இல்லாமல் வெங்கடேசன் மனைவி சுதா என்பவரின் பெயரில் தவறுதலாக பட்டா ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை பார்வையிட்டு நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணத்தில் எதுவும் உள்ளது போல பூஸ்துதியில் உள்ளது என ஆணையர் வைக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றாலும் நீங்கள் மோசடியாக பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டு வாதியின் அனுபவத்தை இடையூறு செய்து வருகிறீர்கள் என்றாலும் சரியல்ல.